நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி. சி.எண். 44 / 2018

2019ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பூபதி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: காளியபபன் வயது: 51

த/பெ.(அ)க.பெ: ' லிங்கண்ணன் தொழில்: மேஸ்திரி

ஊர் : சு.பள்ளிப்பட்டு சமயம்: இந்து

வட்டம் : திருப்ப்துார் சாதி:

மாவ்ட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் சு.பள்ளிபட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன தீபிகா 19.12.2017 அன்று மாலை 5.00 மணிக்கு மேரி மார்கெட் பள்ளியில் படித்து வந்த எனது மகள் பள்ளி முடிந்து சைக்கிளில் வீட்டுக்கு வரும்பொழுது பவுசா நகரில் மினிஸ்சர் கட்டிடம் எதிரில் அரசு டவுன் பஸ் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக போன் மூலம் தகவல் சொன்னார்கள். தகவல் அறிந்து வீட்டில் இருந்த நான் சம்பவ இடத்திற்கு வந்து காயம்பட்ட எனது மகளை மருத்துவமனைக்கு எடுத்து வந்தோம். காயம்அதிகமாக இருந்ததால் மேல் சிகிச்சைக்காக வேலூர் 'மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததார்கள் . அதன் பிறகு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். அந்த விபத்து ஏற்படுத்திய பேருந்து தருமபுரி செல்லும் அரசு பேருந்து என சொன்னார்கள். எனது மகள் சிகிச்சைக்காக திருப்பத்தூர் அரசு மருத்தவமனையில் இருந்தபொழுது போலிசார் விசாரித்தனர். நடந்த விபரங்களை நான் சொன்னதை எழுதிகொண்டனர் . என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்தபுகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

தகவல் தெரிநது எப்பொழுது வந்தேன் என்றால் சுமார் '5.30 மணி இருக்கும். என்னிடம் மருத்துவமனையில் வைத்து பேப்பரில் கையொப்பம் மட்டும் வாங்கினார்களா? என்றால் எழுதியிருந்ததில் தான் கையொப்பம 'வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என தெரியுமா என்றால் படித்து பார்த்து தான் கையொப்பமபோடடேன எத்தனை கையெழுத்துக்கள் போட்டேன் என்றால் அந்த பதட்டத்தில் 2,3

போட்டிருக்களாம் தற்பொழுது நினைவில்லை. விபத்து நேரடியக தெரியாது என்றால் சரிதான் தகவல்' அறிந்துவந்து தான் பார்த்தேன்.

ம.வி:- இல்லை

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி. சி.எண். 44 / 2018

2019ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பூபதி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: சுல்தான் வயது: 43

த/பெ.(அ)க.பெ: முகமது அனிப் தொழில்: ரியல் எஸ்டேட்

ஊர் : திருப்பத்தூர் சமயம்: இந்து

வட்டம் : திருப்ப்தூர் சாதி:

மாவ்ட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் திருப்பத்தூரில் குடியிருந்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விபத்து நேரத்தில் பேருந்தை எதிரிதான் ஓட்டி வந்தார். சுமார் ஒரு வருடங்களுக்கு முன்னர் 19ம் தேதியன்று மாலை 4.30 - 5.00 மணியளவில் நான் வாடகைக்கு குடியிருந்த வீட்டை காலி செய்து விட்டு முன்பணத்தை பெறுவதற்காக வீட்டின் உரிமையாளர் தருமன் என்பவரின் கடைக்கு சென்று கடைமுன்பாக நின்றுகொண்டிருந்தேன் அந்த கடை விபத்து நடந்த திருப்பத்தூரில் இருந்து கிருஷ்ணகிரி சாலையில் மினிஸ்சர் வீரமணி என்பவரின் கட்டிடத்தில் அருகில் உள்ளது. விபத்த அந்த கட்டிடத்திற்கு முன்பாக சாலையில் நடந்தது. அந்த நேரத்தில் அந்த மாணவி சைக்கிளில் பள்ளி முடிந்து வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தார். அவருக்கு பின்னால் அரசு பேருந்து வந்து கொண்டிருந்தது பின்னால் வந்த பேருந்து முன்னால் சென்ற சைக்கிளை இடித்தவுடன் அந்த மாணவி கீழே விழுந்து விட்டார். பஸ் சக்கரம் அவர் மீது ஏறி இறங்கிவிட்டது. அருகில் இருந்த நாங்கள் ஓடிவந்து காயமடைந்திருந்த அவரை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் ஏற்றி அனுப்பி வைத்தோம். அதன் பிறகு அவருடைய பெற்ரோரை தோடி அவர்வீட்டிற்குசென்றபோது அங்கு யாரும் இல்லை. மீண்டும்மருத்துவமனைக்கு வந்தபோது காயமடைந்த நபரை மேல் சிகிச்சைக்காக வேலூருக்கு எடுத்து சென்றிருந்தனர் . அதன்பிறகு 2 நாள் கழித்து அந்த மாணவி இறந்துவிட்டார் தகவல் தெரிந்துகொண்டேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

எ.த.கு.வி:-

திருப்பததூர் கிருஷணகிரி சாலை 25அடி அகலம் உடையது என்றால் சரிதான். அந்த பகுதியில் எப்பொழுதும் வாகனங்களும் அதிகம் சென்றுகொண்டிருக்கும் என்றால் சரிதான். பொதுமக்களும் அதிகம் செல்வார்கள் என்றால் ஆமாம். அந்த நேரத்தில்

பள்ளி முடிநது மக்கள்அதிகமாக சென்றுகொண்டிருந்தார்கள். சம்பவ நேரத்தில் மாணவி தீபிகா மற்ற 3 மாணவிகளுடன் ஆளுக்கொரு சைக்கிளில நால்வராக ஒன்று போல சென்றுகொண்டிருந்தார்கள் என்றால் இல்லை. முன்பின் இருவராக சென்றுகொண்டிருந்தார்கள். அதில் இறந்துபோனவர் எந்த இடத்தில் சென்றுகொண்டிருந்தார் என்றால் முதலில் ஒரு பள்ளிமாணவி சைக்கிளில்சென்று கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் விபத்து ஏற்பட்ட மாணவி 2வதாக சென்று கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் 3 மாணவிகள் வந்து கொண்டிருந்தார்கள். சத்தம்கேட்டபிறகு தான் பார்த்தேன் என்றால் இல்லை. இடிக்கும்போது நான் பார்த்தேன். வாகத்தின் எந்த பகுதி இடித்தது என்றால் முன்பக்க சக்கரத்தின் முன்புள்ள மெக்காடு பகுதி இடித்து மாணவி கீழே விழுந்தார். அதன்பிறகு அந்த பேருந்தின் பின்பக்க சக்கரம் ஏறிவிட்டது. விபத்தை நான் பார்க்கவில்லை என்றும் போலிசார் கேட்டுகொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. நான் பார்த்தேன்.

ம.வி:- இல்லை

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி. சி.எண். 44 / 2018

2019ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பூபதி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: தருமன் வயது: 54

த/பெ.(அ)க.பெ: குடிகவுண்டர் தொழில்: கருங்கல் வியாபாரம்

ஊர் : சு.பள்ளிப்பட்டு சமயம்: இந்து

வட்டம் : திருப்ப்துார் சாதி:

மாவ்ட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் சு.பள்ளிபட்டு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கருங்கலி வியாபரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் விபத்து ஏற்படுத்திய டவுன் பேருந்தை ஓட்டி வந்த நபர். கடந்த 19.12.2017 அன்று மாலை 5.00 மணிக்கு என்னுடைய கடை அமைந்துள்ள கிருஷ்ணகிரி பவுசி நகரில் விபத்து ஏற்பட்டது. எனது ஊரைச்சார்ந்த காளியப்பன் என்பவருடைய மகள் பள்ளி முடிந்து சைககில் வீட்டிற்கு சாலையில் இடது ஓரம்மாக 2,3 மாணவிகளுடன் சைக்கிளில் வந்துகொண்டிருந்தனர். அப்பொழுது தீபிகாவின் சைக்கிளை எதிரி ஓட்டிவந்த டவுன் பஸ் முன்பக்க படிகட்டு பகுதி இடித்து விட்டது. அதில் கிழே விழுந்த மாணவியின் மீது பேருந்தின் பின்பக்கசக்கரம் இடது சக்கரம் ஏறிவிட்டது. விபத்தை பார்த்த நானும் அங்கிருந்தவரும் ஓடிச்சென்று மாணவிக்கு தண்ணீர் கொடுத்து பின்னர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

விபதது நேரத்தில் அந்த மாணவி 4 மாணவிகளுடன் சேர்ந்து ஒன்றாக வந்துகொண்டிருந்தார்கள் என்றால் இல்லை. தனித்தனியாக தான் வந்துகொண்டிருந்தார்கள். நான் கடையின் முன்பு நின்று பார்த்தேன். அந்த மாணவியின் சைக்கிளில் இருந்த மதிய உணவு எடுத்துசெல்லும் பை பேருந்தில் படிகட்டு அருகே மாட்டி விட்டது என்றால் சரிதான். பை மாட்டிய உடன் உள்ளே இழுத்துவிட்டது. சத்தம் கேட்டபிறகுதான் விபத்தை பார்தேனா என்றால் இல்லை . நடந்ததை நான் எதிரில் நின்று பார்த்தேன். எனது ஊர்காரர் என்பதல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை .

ம.வி:- இல்லை

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி. சி.எண். 44 / 2018

2019ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.4 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.பூபதி உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: செல்வம் வயது: 47

த/பெ.(அ)க.பெ: ராஜி தொழில்: கூலி

ஊர் : எலவம்பட்டி சமயம்: இந்து

வட்டம் : திருப்ப்துார் சாதி:

மாவ்ட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் எலவம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கம்பி கடையில் கூலிக்காக வேலை செய்த வருகிறேன். 19.12.2017 அன்று மாலை நேரத்தில் பள்ளி முடிந்து மாணவர்கள் சென்றுகொண்டிருந்தார்கள். ஹவுசிங்போர்டு பகுதியில் செப்டிக்டேங் கல் விற்கும் கடை எதிரில் நடந்தது. சம்பவ நேர்த்தில் நான் அந்த கடைக்கு கல் வாங்குவதற்காக சென்றிருந்தேன். அந்த மாணவி சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அப்பொழுது சத்தம்கேட்டதால் நான் திரும்பி பார்த்தல் டவுன்பஸ் மோதி மாணவி ரோட்டில் கிடந்தார். அருகில் இருந்த நாங்கள் ஓடிச்சென்று மாணவிக்கு தண்ணீர் கொடுக்கமுயற்சி செய்தோம். பின்பு ஆட்டோ மூலமாக சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். விபத்து ஏற்படுத்திய பேருந்து அரசு டவுன்பஸ் என்று தான் தெரியும். அதன் எண் எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை. பேருந்தை யார் ஓட்டிவந்தார் என நான் அந்த பதட்டத்தில் நான் பார்க்கவில்லை . விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

அப்பொழுது பேருந்தில் கூட்டமாக இருந்தார்கள் என்றால் இறங்கி நனிறு இருந்தார்கள் பார்த்தேன். சத்தம் கேட்டு தான் பார்த்தேன் என்றால் ஆமாம். பார்த்தேன். காயம்பட்டவர் எவ்வாறு வந்தார் என்றால் நான் சம்பவம் முடிந்த பிறகு தான் பார்த்தேன். சுல்தான்,தருமன் ஆகியோரும் அப்பொழுதுதான் அங்கு வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் ,அங்கு இருந்தார்கள். தருமன் கேட்டுகொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

ம.வி:- இல்லை